- இளவரசு சோம.(ப.ஆ.), (2010), நன்னூல் - எழுத்ததிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- சிவத்தம்பி கார்த்திகேசு, (2012), தமிழ் கற்பித்தல், NCBH, சென்னை.

**II. வலைதளம்**

- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை, இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு (2016-17) **'கற்றலும் கற்பித்தலும்'** 'கற்பிக்கும் தன்மை' - ப.ஜெகநாதன், வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. http://www/tnteu.ac.in
- **'கற்பித்தல் முறை' - தமிழ் விக்கிப்பீடியா,** https://ta.m.wikipedia.org/wiki/
- **'இலக்கியம் கற்பிக்கும் அணுகுமுறைகளின் நன்மைகள்', நித்யா சேகர் & காயத்ரி,** http://www.scribd.com
- **'தமிழ் கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு'** - பா. நாகேஸ்வரி, தமிழ் இணைய ஆசான் (Tamil Computing Journal) செப்டம்பர் 4, 2021 - வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. http://www.tamilcomputingjournal.org


******************

# மனித வளர்ச்சியில் கற்றல் உளவியல் - அறிஞர்களின் சிந்தனைகள் Psychology of learning in human development - Thoughts of scholars


## முனைவர் ஜெ.கவிதா | Dr.J.Kavitha

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, Assistant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore. MAIL ID: jkavitha@psgrkcw.ac.in, kavithamahendiran1973@gmail.com,phono no: 948757527, ORCID : https://orcid.org/0000-0002-3938-1985



### ஆய்வுச் சுருக்கம்

சைக்காலஜி துறையானது மனிதனுடைய மனதையும் நடத்தையையும் பற்றி ஆராயும் ஒரு துறையாகும். இத்துறையில் வல்லுனர்களை சைக்காலஜிஸ்ட் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தனிமனிதனின் புலனுணர்வு, அறிவாற்றல், செயல்திறன், மன அழுத்தம், ஆளுமை, நடத்தை ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து உரிய தீர்வு அளிக்கின்றனர். உளவியல் சார்ந்த அறிவானது அன்றாட வாழ்வில் உள்ள கல்வி, குடும்பம், தொழில், உள்ளிட்டவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறது. மனித வளர்ச்சியில் ஏற்படும் நன்மைகள், தீமைகள், அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை சைக்காலஜி துறையானது விளக்குகிறது. மனித வளர்ச்சியில் கற்றல் உளவியல் என்ற தலைப்பில் எண்ணற்ற உளவியல் அறிஞர்கள் விளக்கவுரை கொடுத்துள்ளனர். இவ்வாறான விளக்கவுரையை கற்றுத்துர மாணவர்களுக்கு எங்கு?, யார்?, எப்படி?, எங்கே? எப்போது கற்கப்படுகிறது என்ற வினாவிற்கு விடையாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். கற்றலானது மனித வளர்ச்சியில் பிறப்பு முதல் இறப்புவரை நடந்தேறி வருகின்றது.

## Abstract

The field of psychology is the study of the human mind and behavior, as a psychologist who excels in this field of the perception, cognition, performance of the individual, and explores stress, personality, and behavior springs. In the current mechanical life, stress can affect children as well as adults strongly. Psychological knowledge includes education in everyday life, family, doing research on industry, including about human development, discussing the pros, cons, learning practice in this topic, student and finding causes cum curing remedials includes education in everyday life, family, does research throughout the industry. Psychology is the study of evolution and its changes that is the purpose of this article. It is also discovering how psychology can be expressed through interpreted as a concept of scholarship. According to Heavikast, evolutionary processes are involved in the development of human learning in physical development, intellectual development, mental development, moral development, social development. Golbok also said that students cultivate personality traits and cultivate merits, in my opinion, moral development is the virtue of students. He says that it is not only about cultivating but also about creating a good society. Thus, learning took place in human development from birth to death. Various psychologists have researched and revealed that is coming you can find out through this article.

## திறவுச்சொற்கள் (Keywords)

மனித வளர்ச்சி, கற்றல் உளவியல், சைக்காலஜி, மனவெழுச்சி வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, சமூக வளர்ச்சி, கற்றல் பண்புகள், சமுதாய அன்பு, இரக்கம், பிரிவு, பாராட்டு, ஹைப்போதாலமஸ், நுண்ணறிவு, உற்றுநோக்கல், தனியாள் வேற்றுமை, Personality, genetics, behaviors, adolescence adulthood, parenthood, psychology, sociology, economics, anthropology, ethics, social, environment, authority, persuasion.

## முன்னுரை

தற்போதைய இயந்திர வாழ்க்கையில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்படும் ஒரே கருத்து மன உளைச்சல். அதற்கான காரணங்களைக் கண்டறிதல், இதைக் குணமாக்குதல் பற்றிய படிப்புதான் உளவியல் (psychology) எனப்படும். உளவியல் எனும் சைக்காலஜி துறையானது மனிதனுடைய மனதையும், நடத்தையையும் பற்றிப் படிக்கும் படிப்பாகும். இந்தத் துறையில் வல்லவர்கள் சைக்காலஜிஸ்ட் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தனிமனிதனின் புலன் உணர்வு அறிவாற்றல், செயல்திறன், மன அழுத்தம், ஆளுமை, நடத்தை ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து உரிய தீர்வு அளிக்கின்றனர். உளவியல் சார்ந்த அறிவானது அன்றாட வாழ்வில் உள்ள கல்வி, குடும்பம், தொழில் உள்ளிட்டவைகளைப் பற்றி முழுவதும் ஆராய்ச்சி செய்கிறது. மேலும் அவற்றால் ஏற்படும் நன்மைகள், தீமைகள், அதற்கான தீர்வுகள், மேலும் மனித வளர்ச்சியில் ஏற்படும் உடல் மற்றும் உள்ள வளர்ச்சிகள், இவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் கற்றலாக, உளவியல் ரீதியில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மனித வளர்ச்சி

மனிதன் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கின்றான். அந்த மாற்றம் தான் மனிதனின் வளர்ச்சி எனப்படும். கல்வியானது தற்போது உடல் உள்ள வளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது, அறிவு மனவெழுச்சி உடலியக்க வளர்ச்சி ஆகியவற்றின் வளர்ச்சியை ஒரு தனிமனிதனுடைய முழு வளர்ச்சியாகக் கொள்ளலாம். மனித வளர்ச்சிசார் செயல்கள் என்பவை தனி மனிதனிலும் சமூகத்திலும் ஏற்படக்கூடிய

பொதுவான செயலாகும். "**ஹவிகொர்ஸ்ட்**" என்பவரது கருத்துப்படி ஒருவனுடைய வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் அல்லது வயதில் வளர்ச்சிசார் செயல்கள் ஏற்படுகின்றன. (ஆ.மீனாட்சிசுந்தரம், முற்போக்குக் கல்வி உளவியல், ப.23) இச்செயல்கள் வெற்றிகரமாக இருக்குமாயின் மகிழ்ச்சியையும் பின்னர் வரப்போகும் செயல்களில் வெற்றியையும் அளிப்பதாகும். மனித வளர்ச்சிசார் செயல்கள் பல்வேறு நிலைகளில் நடைபெறுகின்றன. அவை உடல்வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, சமூகவளர்ச்சி என வகைப்படுத்தலாம்.

## உடல்வளர்ச்சி

உடலில் உள்ள உட்புற வெளிப்புற உறுப்புகளின் வளர்ச்சியே உடல் வளர்ச்சியாகும், நல்ல உடல் வளர்ச்சியும் உடல் நலனுமே அறிவு வளர்ச்சி, ஒழுக்கவளர்ச்சி, மனவெழுச்சியின் வளர்ச்சிக்கு அடிப்படையாகும். குழந்தைப் பருவத்தில் முதல் இரண்டு ஆண்டுகளில் அதன் வளர்ச்சி அதிகமாக இருக்கும். முதல் ஆண்டில் 50 சதவீதமும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் 70 சதவீதமும் அதன் வளர்ச்சி இருக்கும். இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அதன் வேகம் குறைகிறது. பதினோரு வயது வரை பையனும், அதன் பின் (அதாவது 12 அல்லது 13 வயதுக்குப் பின்) பெண்களும்தான் வேகமாக வளர்கிறார்கள், எடையிலும் கூடுகிறார்கள். உடல் வளர்ச்சியும் உடலியக்க வளர்ச்சியும் (Motor Development) இணைந்தவை நடப்பது, ஓடுவது, கண் அசைவு, தலைஅசைவு, எல்லாம் உடலியக்க வளர்ச்சியைச் சார்ந்தவை, தசை, நரம்பு இயக்கங்களைக் கட்டுப்படுத்துவதும் இதில் அடங்கும் உடலியக்க வளர்ச்சியின் முதிர்ச்சி உடல்வளர்ச்சிக்கு மிகவும் தேவையான ஒன்றாகும். உடலியக்க வளர்ச்சி ஆண், பெண் இரு பாலருக்குமிடையே மிகுந்த வேறுபாடு உடையது. ஒரு சராசரிப் பையன் வலிமை, வேகம் போன்ற உடலியக்கங்களில் ஒரு சராசரிப் பெண்ணைவிட மேலாக இருக்கிறான். குரல், பசி ஆகியவற்றிலும் வேறுபடுகிறான். குழந்தையின் வளர்ச்சி நிலை அதன் நடத்தையிலும் முக்கிய விளைவுகளை ஏற்படுத்துகிறது. நல்ல உடல் நலத்தோடு இருக்கும்போது அதனுடைய செயல்களும் நல்ல மாற்றம் பெறுகின்றன.

## அறிவுவளர்ச்சி

அறிவு வளர்ச்சி குழந்தையின் ஆரம்ப காலத்திலேயே காட்சித்திறன் மூலமாக வரளத்தொடங்கியப் பின்னர் கற்பனை, மொழித்திறன், நினைவாற்றல் போன்றவை மூலம் முழுமையடைகின்றது. உள்ளத்திறன்கள் பதினைந்து முதல் பதினேழாம் வயதிற்குள் உச்சகட்ட வளர்ச்சியைப் பெற்றுவிடுகின்றன. "**தர்ஸ்டன்**" என்பார் அறிவு வளர்ச்சியானது பல்வேறு வயதில் முதிர்ச்சியடைகின்றது என்று கூறுகின்றார். (மேலது, ப.25) முதன்மையான ஏழு உள்ளத்திறன்களில் புலன் காட்சி வேகம் முதலில் முதிர்ச்சியடைகின்றது. இடம் பற்றிய அறிவு, பகுத்தறிவு போன்றவை பதினான்காம் வயதில் முதிர்கின்றன. சொல்லாற்றலும் செறிவும் இறுதியாகவும் முதிர்ச்சியடைகின்றன. தூரம், இடம் போன்றவை பற்றிய அறிவு ஆரம்பத்திலும் எண், காலம், காரணகாரியம் போன்றவை பற்றிய அறிவு காலத்தின் அடிப்படையில் வளர்கின்றன. மரபுரிமையானது அறிவு வளர்ச்சிக்கு எல்லைக்கோடு அமைத்துவிடுகிறது. பள்ளிகள் மாணவரிடம் பொதிந்து கிடக்கும் ஆற்றலைக் குறிப்பாக சமூக பொருளாதார ரீதியாக பின் தங்கியிருக்கும் மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் அளவிற்குப் பக்குவமான சூழ்நிலையை வழங்க வேண்டும். கற்பிக்கும் முறை, புரிந்து கொள்ளும் ஆற்றல், சிந்திக்கும் ஆற்றல், பகுத்தறியும் ஆற்றல் இவைகளை வளர்க்கும் வகையில் அமையவேண்டும் என்று. "**தர்ஸ்டன்**" கூறுகின்றார்.

## நல்லொழுக்க வளர்ச்சி

ஒழுக்கம் ஒருவனுடைய அறப்பற்றுகளின் தன்மையையும் குறிப்பாக அவனுடைய தன்மதிப்பையும் பொறுத்தே அமைகின்றது. அறப்பண்புகளின் அடிப்படையில்தான் ஒருவனது ஆளுமை personality சிறப்பாக அமையவேண்டும். சமுதாயத்தில் கல்வி ஆற்றும் பணிகளுள் சிறப்பானது நல்லொழுக்கம் பெறுதல் ஆகும். நல்லொழுக்கம் என்பது அறப்பற்றுகளையும், நற்பண்புகளையும் உள்ளடக்கியதாகும். இவ்வொழுக்கம் குழந்தையின் பிறவியிலேயே தோன்றிவிடுவதில்லை. அதற்கு மாறாகப் பயிற்சியினால் ஒழுக்கம் உருவாகின்றது. குழந்தை வளரும் சூழலும், வளர்க்கப்படும் முறையும் தான் குழந்தையின் ஒழுக்கத்தை உருவாகின்றன என்று பியாஜே கூறுகின்றார்.

## பியாஜேயின் நல்லொழுக்க வளர்ச்சிக் கோட்பாடு

பியாஜே, ஒரு குழந்தையின் ஒழுக்க வளர்ச்சியில் ஒரு புதிய கருத்தைக் கூறுகிறார். பியாஜேயின் பார்வையில் ஒரு குழந்தையானது தன் ஆரம்ப நிலையில் சுயநலம் மிகுந்ததாகவும், பின் ஒழுக்க மதிப்புகளைப் பற்றித் தெரிந்த பிறகு சமுதாய சிந்தனை உள்ள குழந்தையாகவும், வளர்கிறது. ஒழுக்க வளர்ச்சியானது, ஒருவர் தனகக்கென வைத்திருக்கும் சுயநலமுள்ள மனநிலையை மாற்றி, மாறி வரும் சமூக சூழலுக்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ளும் மனநிலையை வளர்க்கிறது என்று பியாஜே கூறுகின்றார். (மேலது, ப. 26)

## கோல்பாகின் நல்லொழுக்க வளர்ச்சிக் கோட்பாடு

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த "லாரன்ஸ் கோல்பா'" (Lawrence Kohlberg) என்பவர் நல்லொழுக்க வளர்ச்சியானது குழந்தைப் பருவத்திலிருந்தே தொடங்கி விடுகிறது என்று குறிப்பிடுகின்றார். பல பண்பாடுகளைச் சேர்ந்த குழந்தைகளின் நடத்தைகளை ஆராய்ந்து நல்லொழுக்க வளர்ச்சிக் கோட்பாட்டை உருவாக்கினார். ஒருவருக்கான நியாய உணர்வு வளர்ச்சியைத்தான் இவர் நல்லொழுக்க வளர்ச்சி எனக் குறிப்பிடுகின்றார்.

## நல்லொழுக்கத்தை வளர்க்கும் முறைகள்

மாணவர்களிடம் அறவொழுக்கம் வளர வேண்டுமாயின் அதற்குக் கூட்டு முயற்சி தேவை. ஆசிரியர் நற்பண்புகளைப் பெற்று மாணவரிடம் ஊக்கம் கொடுப்பாரேயானால் மாணவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக உருவாகமுடியும். மாணவர்களிடம் அறப்பற்றுக்களை வளர்க்க ஒழுக்கமுடைய பெரியோர்களின் உறவும், நற்பண்புகளைப் போதிக்கும் நூல்களும் பெருமளவில் துணைபுரியலாம். பள்ளிகளில் மாணவர்கட்கு ஒழுக்க போதனையானது அப்பண்புகளில் செயல்பாடுகளால் போதிக்கப்பட்டு பல்வேறு வாய்ப்புகள் மூலமும், கூட்டுவாழ்க்கை, சமூகசேவை, குடிமைப் பயிற்சி முகாம்கள் போன்றவை மூலமும் வழங்கப்பட வேண்டும். நற்பண்புகளை வளர்ப்பதில் பெற்றோரும் குடும்பமும் பெரும்பங்கேற்கின்றனர். நல்லொழுக்க வளர்ச்சிமூலம் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கலாம் எனவும், மனித வளர்ச்சி கற்றலில் நல்லொழுக்க வளர்ச்சி மிக முக்கியத்துவம் பெற்ற ஒன்று என்பது உளவியல் அறிஞர்களின் கருத்தாகும் என்று கூறப்படுகின்றது.

## மனவெழுச்சி வளர்ச்சி

உணர்ச்சிகள், மனக்கிளா்ச்சிகள், உடலியல் எதிர்ச்செயல்கள் ஆகியவற்றின் இணைப்பே மனவெழுச்சி ஆகும். உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையே மனவெழுச்சியாகும்.

## நேர்றை மனவெழுச்சிகள்

மனவெழுச்சிகளில், ஊக்கம் தரக்கூடியவை, சமூகத்தால் ஏற்கப்படக்கூடியவை நேர்மறை மனவெழுச்சிகளாகும். இவற்றால் தனிநபருக்கும், சமூதாயத்திற்கும், மனநிறைவும், ஊக்கமும் ஏற்படுமே தவிர இழப்பு எதுவுமில்லை. உதாரணமாக மகிழ்ச்சி, உற்சாகம், பெருமிதம், அன்பு, இரக்கம், பரிவு, பாராட்டு, மதித்தல் போன்றன நோ்மறை மனவெழுச்சிகளாகும் (மேலது, ப. 31).

## எதிர்மறை மனவெழுச்சிகள்

விரும்பத்தகாத, பிறர் மனதைப் புண்படுத்தும், தன் மனநிலையையும், சமுதாயத்தில் வாழும் மக்களின் மனநிலை இவற்றைப் பாதிக்கும் மனவெழுச்சிகள் எதிர்மறை மனவெழுச்சிகளாகும். இதனால் மன உளைச்சல் ஏற்படும். சமூக உறவு பாதிக்கப்படும், உதாரணமாக மகிழ்ச்சியின்மை, சினம், அச்சம், துயரம் வலி, அருவருப்பு, குற்ற உணர்வு, அவமானம், பொறாமை, இழிவுபடுத்துதல், புறக்கணித்தல் போன்றவை எதிர்மறை மனவெழுச்சிகளாகும். (மேலது, ப. 31)

## வாழ்வில் மனவெழுச்சியின் பங்கு

மூளையின் ஹைப்போதலாமஸ் பகுதியிலிருந்து நரம்புத்துடிப்புகள் பெருமூளைக்குச் சென்று உணர்ச்சி அனுபவங்களை உண்டாக்குகின்றன. கீழே செல்லும் துடிப்புகள் நரம்புத் தொகுப்பின் ஸிம்பத்தடிக் பிரிவைத் தூண்டி, அதன் மூலம் பல உடலியக்கங்களையும், உடல்நிலையில் மாறுதல்களையும் ஏற்படுத்துக்கின்றன. தனிமனிதனின் நடத்தையைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றன. பிறக்கும் பொழுதே மனவெழுச்சிகள் உள்ளன. அவை அடிப்படை மனவெழுச்சிகள் எனப்படுகின்றன. சினம், அச்சம், அன்பு மூன்றும் அடிப்படை மனவெழுச்சிகளென்று **வாட்சன்** குறிப்பிடுகின்றார். (மேலது, ப. 33)

## மனவெழுச்சி முதிர்ச்சியின் பண்புகள்

ஒரு மனிதனின் தேவைப்படும் நேரங்களில் தேவைப்படும் நேர் (அல்லது) எதிர்மறை மனவெழுச்சிகளை வெளிப்படுத்தப் பக்குவம் பெற்றிருக்கும் நிலையைத் தான் மனெவெழுச்சி முதிர்ச்சி என்றழைக்கின்றோம். ஒருவரின் மனவெழுச்சி வளர்ச்சியானது கீழே தரப்பட்டிருக்கும் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

- ❖ சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் வகையில் மனவெழுச்சி இருக்கவேண்டும்.
- ❖ ஒருவர் திடீரென உணர்ச்சி வயப்படாத நிலையையும், அதனைக் கட்டுப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்
- ❖ உரிய நேரத்தில், உரிய இடத்தில் மனவெழுச்சிகளை வெளிபடுத்தும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.
- ❖ பிறரோடு விரும்பத்தக்க சமூக உறவுநிலை வைத்திருத்தல் வேண்டும்.
- ❖ சிந்தித்து ஆராய்ந்து முடிவுகள் எடுக்கும் பண்பினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- ❖ போதுமான அளவு தற்கருத்து மற்றும் சுய மதிப்பு பெற்றவராயிருத்தல் வேண்டும். மேற்கூறியவை மனவெழுச்சி முதிர்ச்சியின் பண்புகளாகும் என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

மேற்கூறிய மனவெழுச்சி முதிர்ச்சியின் பண்புகளாக W.N.கெல்லாக் மற்றும் L.A.கெல்லாக் என்ற உளவியல் அறிஞர்கள் இவற்றைக் கூறுகின்றனர்.

**மனவெழுச்சி நுண்ணறிவுப் பற்றி ஜாக்மேயர் மற்றும் பீட்டர் சலோவேயின் கருத்தாக்கங்கள்**

மனவெழுச்சியை ஆளும் திறமையே மனவெழுச்சி நுண்ணறிவு என்று அழைக்கப்படுகிறது. தீவிரமாக மனவெழுச்சியை எல்லா நிலைகளிலும் ஒரே மாதிரி வெளியிடாமல், அம்மனவெழுச்சியைத் தோற்றுவித்த காரணி, சூழ்நிலை ஆகியவற்றிற்கு ஏற்ற அளவிலேயே மனவெழுச்சிகள் வெளியிடப்படுகின்றன. மனவெழுச்சியை ஒத்திப்போடவும் கட்டுப்படுத்தவும் மனவெழுச்சி நுண்ணறிவுடையோரால் மட்டுமே முடியும். மேலும் நெருக்கடி நிலையிலும் அமைதியுடன் நடந்துகொள்ளும் ஆற்றலும் உள்ளது. பிறருடன் மகிழ்ச்சியாக இருப்பது ஒரு திறன். தனக்கும் பிறருக்கும் பயன்படும் வகையில் ஓய்வு நேரத்தைச் செலவிடுதல், பிறருக்கு உதவுதல் தன் பிழைகளின்று உண்மையை உணருதல், போன்ற நற்பண்புகள் மனவெழுச்சி நுண்ணறிவின் வெளிப்பாடாகும். நுண்ணறிவு ஈவைப் பயன்படுத்தி நுண்ணறிவை அளவீடு செய்வதில் 1990 ஆண்டுவாக்கில் சில சர்ச்சைகள் எழுந்தன. அமெரிக்க பல்கலைக்கழகப் பேராசிரியர்களான **ஜாக்மேயர்** மற்றும் **மீட்டர்சலோவே** ஆகியோர் மனவெழுச்சி நுண்ணறிவ ஈவு என்ற பதங்களைப் பயன்படுத்தினர். மனவெழுச்சியைச் சிந்தனையோடு இணைத்து உணர்ந்து அதனைப் புரிந்து மேலாண்மை செய்வதற்கான மனவெழுச்சியுடன் கூடிய ஆராய்ந்தறியும் திறனே மனவெழுச்சி நுண்ணறிவு என்று **ஜாக்மேயர்** மற்றும் **பீட்டர் சலோவே** கூறுகின்றனர். (மேலது, ப. 34)

**மனவெழுச்சி நுண்ணறிவின் முக்கியத்துவம்**

- ❖ மனவெழுச்சியுடன் கூடிய நுண்ணறிவு பெற்றவர் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கின்றனர்.
- ❖ மாணவர்களிடம் மனவெழுச்சி நுண்ணறிவை வளர்த்து அவர்களின் வாழ்க்கையை ஆரோக்கியமானதாகவும், மகிழ்வுள்ளதாகவும் மாற்ற இயலும்.
- ❖ மனவெழுச்சி நுண்ணறிவு சவால் நிறைந்த சூழல்களை வெற்றிகரமாகச் சந்திக்க மிகவும் பயன்படுகிறது.
- ❖ பிறர் மனவெழுச்சிகளைப் புரிந்து அவர்களுடன் மனித உறவுகளை மேம்படுத்தவும், தன் மனவெழுச்சிகளைப் புரிந்து அவற்றை மேலாண்மை செய்யவும் மனவெழுச்சி நுண்ணறிவு பயன்படுகிறது.
- ❖ ஒருவரின் வாழ்க்கை வெற்றிக்கு 20 நுண்ணறிவு ஈவு உதவுகின்றது. என்றால் மீதி 80 சதவீத உதவி, மனவெழுச்சி நுண்ணறிவு ஈவு சமூக அந்தஸ்து மற்றும் கடும் உழைப்பு போன்றவற்றால் கிடைப்பதாக உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர் மற்றும் கடும் உழைப்பு போன்றவற்றால் கிடைப்பதாக உளவியல் அறிஞரான எஸ்.ஹெயின் கூறுகின்றார்.

**சமூக வளர்ச்சி**

சமூக வளர்ச்சி என்பது சமுதாயத்தில் ஒரு தனிப்பட்ட மனிதனின் வளர்ச்சியைக் குறிக்கும். அத்தகைய வளர்ச்சியின் மூலம் அவன் சமுதாயத்தில் ஒரு பயனுள்ள உறுப்பினராகவும், அவனைச்சுற்றியுள்ள மனிதர்களிடமும் ஒரு நல்ல மதிப்பினையும் பெற முடியும். தான் வாழும் சமுதாயத்திலும், தன்னைச்சுற்றியுள்ள மக்களிடமும் தனிமனிதன் தன்னுடைய மதிப்பினையும் வளர்த்துக் கொள்வதே சமூகவளர்ச்சியாகும். ஒரு மனிதனின் சமூக

நடத்தையில் விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் உள்ள கொள்கைகளில் ஏற்படக் கூடிய வளர்ச்சியே சமூக வளர்ச்சி என்கிறோம். வாழும் சூழ்நிலைகளுக்கும் உயிரிகளுக்கும் இடையே உள்ள தன்மையைப் பொறுத்தே அவைகளின் சமூகவளர்ச்சி அமைகின்றது. சூழ்நிலைதான் இதில் பெரும்பங்கேற்கிறது. மனவெழுச்சிக்கும் அறிவு, மூளை, உடல் ஆகியவற்றின் வளர்ச்சிக்குச் சமூகச்சூழலே முக்கியக் காரணியாக அமைகின்றது. சமூக இயல்பினராக்குதல் (socialization) என்னும் பண்பு குழந்தையின் பிறப்பிலிருந்துதான் தொடர்கின்றது. மாறாக மனவெழுச்சியைக் கருவிலிருந்தே உருவாக்க முடியும். என்.எஸ்.பவர்ஸ் (F.S.Powers) என்பாரது வரையறையில் சமூகவளர்ச்சி என்பது நல்வழிப்படுத்தப்பட்ட முன்னேற்றகரமான வளர்ச்சியாகும் என்று கூறுகின்றார். (மேலது, ப. 36)

### கற்றல் உளவியல்

ஒருவரின் நடத்தையில் ஏற்படும் மாற்றமே கற்றல் எனப்படும். உளவியல் ரீதியில் கற்றல் என்பது தூண்டலுக்கேற்ப பயன்படுவதாகும். கேட்ஸ் (Gates) என்பவர் அனுபவம், பயிற்சி, ஆகியவற்றின் மூலம் எழும் நடத்தை மாற்றமே கற்றல் எனப்படும் என்கிறார். (மேலது, ப. 43) மேலும் ஒரு தனிமனிதன் பொதுவாக வாழ்க்கையில் பெறக்கூடிய பழக்கவழக்கங்கள், அறிவு, மனப்பான்மை ஆகியவற்றைத் தரக்கூடிய ஒரு செயல்முறையே கற்றல் எனப்படும் என்று ஜி.டி.போயஸ் (G.D.Boaz) கூறுகிறார். (மேலது, ப. 43) பிற உயிர்களைக் காட்டிலும் தம்மை உயர்வாகக் காட்டக்கூடியத் தமது அனுபவத்திலிருந்து பயனடையச் செய்யும் திறமையே கற்றல் என மாஸ்கோவிட்ஸ் (Moscowitaz), ஆர்கல் (Orgal) என இருவரும் கருதுகின்றனர். மேற்கூறிய உளவியல் அறிஞர்கள் கற்றலுக்கான வரையறையைக் கொடுக்கின்றனர். (மேலது, ப. 44)

### கற்றிலின் பண்புகள்

நடத்தையில் ஏற்படும் கற்றலானது வாழ்நாள் முழுவதும் நிகழ்ந்துகொண்டே இருக்கும். கற்றல் என்பது ஒரு அறிவு நுட்பம், பல அனுபவங்களை ஒழுங்கு படுத்துவது, புதிதாக ஒன்றைச் செய்து கொண்டே இருக்கக்கூடியது. இதுவே கற்றலின் பண்புகளாகும்.

### கற்றலின் தன்மை

ஒரு மாணவனுக்குத் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான விருப்பம் என்பது ஊக்கம் Motive ஆகும். பாடத்தில் தேர்ச்சி அமைந்தால் அது இலக்கு (Goal) என்பதாகும். பாடத்திட்டத்தைத் தவிர வேறு களைப்பு, கற்றலின் வசதிக்குறைவு, மற்ற செயல்களில் விருப்பம் இவைகள் தடைகள் (Burriers) ஆகும். இவற்றிற்கான அட்டவணை விளக்கம் கீழே உள்ளது. (மேலது, ப. 45)

| | | |
|---|---|---|
| தேர்வில் தேர்ச்சி பெறுதல் | களைப்பு வசதிக்குறைவு | பாடத்தைக் கற்றல் |
| (ஊக்கம்) | (தடைகள்) | (இலக்கு) |

### மனித வாழ்வில் கற்றலின் முக்கியத்துவம்

மனித நடத்தைக்கு அடிப்படையாக அமைவது கற்றலே. நாம் பேசும்மொழி, நமது பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள், இலட்சியங்கள், கொள்கைகள், ஆளுமைக் குணங்கள், புலன்காட்சி ஆகிய அனைத்திலும் கற்றலானது முக்கியப் பங்கு வகிக்கிறது. சுவாசித்தல், கண்சிமிட்டுதல், தாயிடம் பால் அருந்துதல் கால் கைகளை உதைத்தல், ஒலியெழுப்புதல், போன்ற மிகச்சில இயல்பூக்கங்களைக் கொண்டு பிறக்கும்

மனிதக் குழந்தையானது, கற்றலின் காணரமாகவே, தனது சுற்றுச்சூழலைக் கையாள்வதில் மேம்பட்ட நடத்தையை வெளிப்படுத்தமுடிகிறது. இதன் காரணமாகவே அக்குழந்தைத் தனித்து இயங்குவதிலும் சுயசார்புடையதாக மாறுவதிலும் வெற்றி பெறுகிறது. எனவே கற்றல் ஆற்றலால் மனிதக் குழந்தைப் பிற உயிரிகளை விடச் சிறப்புற்று வலிமை மிக்கதாகத் திகழ முடிகிறது. பேச்சு, சிரிப்பு, நுண்திறன்கள், கலைவளர்ச்சி, உயர்வகை பொழுதுபோக்கில் நாட்டம் போன்றவை மனிதர்களுக்கு மட்டுமே உரியவை. இவற்றைக் கற்றலின் காரணமாக மனிதக் குழந்தைத் தனதாக்கிக் கொள்கின்றது. **(**பேராசிரியர் கி.நாகராஜன், கற்றல் மனிதவளர்ச்சி தொடர்பான உளவியல், நான்காம் பதிப்பு ஜீலை 2012, இராம் பதிப்பகம் சென்னை – 93 (பக் – 178)

## கல்வியியலில் கற்றல் கோட்பாடுகளின் முக்கியத்துவம்

கற்றல் என்பது பல நிலைகளில் பல வகைகளில் நிகழ்கிறது என்ற உண்மையை, பல்வேறு கற்றல் கோட்பாடுகள் நமக்கு உணர்த்துகின்றன. கற்கும் விஷயத்தைப் பொறுத்தும், கற்பவரின் நுண்ணறிவு, முந்தை அனுபவங்கள் ஆகியவற்றைப் பொறுத்தும் கற்கும் முறைகள் அமைகின்றன. பல்வேறு கோட்பாடுகளை ஆசிரியர் அறிந்திருப்பதன் மூலம், ஒவ்வொரு வகுப்பு மாணவர்களின் கற்றல் ஆற்றலுக்கு ஏற்ப, கற்பிக்கும் விஷயங்களுக்கு மிகப் பொருத்தமான கற்பித்தல் முறையைத் தேர்ந்து செயல்படுவாரேயானால், வகுப்பறைக் கற்றல் – கற்பித்தல் மேம்பாடு அடையும் – மாணவர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபட்டு தங்கள் முழுத்திறனையும் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பாக அமையும்.

## காக்னேயின் கற்றல் கோட்பாடு (Gagne's Theory of hierarchical learning)

இராபர்ட் காக்னேயின் கோட்பாடுபடி எல்லாவகைக் கற்றல்களும் ஒரே மாதிரியானவை அல்ல. எளிய கற்றலிலிருந்து சிக்கலான பிரச்சனைகளையும் தீர்க்க கற்றுக் கொள்வது வரை கற்றலில் எட்டு வகைகள் உள்ளன. அவை

1. குறியீடுகள் அல்லது அடையாளங்களைக் கற்பது (signal learning)
2. தூண்டல் – துலங்கல் இணைப்பைக் கற்றல் (S.R Learnig)
3. உடலியக்கத் தொடர் இணைப்பு (motor Chuining)
4. சொற்கள் இணைத்தலைக் கற்றல் (verbal Chuining)
5. வேற்றுமையறிதல் (Discriminative Learning)
6. பொதுமைக் கருத்துகளைக் கற்றல் (Concepl Learning)
7. விதியைக் கற்றல் (Rule Learning)
8. சிக்கல் (அ) பிரச்சனையைத் தீர்க்க கற்றல் (Problem Solving)

எனக் காக்னேயின் கற்றல் கோட்பாடானது, கீழ்நிலைக் கற்றலில் இருந்து, உயர்நிலைக் கற்றலை அடைய முயற்சிப்பதே ஆகும் என்று வலியுறுத்துகின்றது.

## கற்றலில் தனியாள் வேறுபாடுகள்

கற்றல் திறன் அனைத்து மாணவர்களிடமும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. ஆர்வம், புலன்காட்சி, மனப்பான்மை, நுண்ணறிவு, ஆளுமை போன்றவை ஆளுக்கு ஆள் மாறுபடுவதைப் போன்றே கற்றல் திறனும் ஆளாளுக்கு மாறுபடுகிறது. கற்றலானது, ஆர்வம், நுண்ணறிவு, ஊக்கம் (Motivation) ஆகியவற்றின் அடிப்படையில் அமைவதால் கற்றல்திறனானது ஆளுக்கு ஆள் பெரிதும் மாறுபட்டு அமைகிறது.

ஒருவன் ஆர்வத்துடன் கற்றுக் கொள்கிறான். ஆனால் மற்றொருவன் கற்பதற்கு அதிக நேரம் தேவைப்படுபவனாகவும் ஆர்வமின்றியும் கற்றுக்கொள்கிறான். நுண்ணறிவு மிக்கவன் சுயசிந்தனையைப் பயன்படுத்திக் கற்கிறான். நுண்ணறிவில் குறைந்தவன்

முயன்று தவறிக் கற்றல் முறையையே அதிகம் பயன்படுத்துகிறான். ஊக்கம் மிகுந்தவன் கவனத்துடன் கற்பதால் கடினமான பாடப்பொருளையும் கற்றலில் அதிகம் கவனம் செலுத்துவதில்லை, அவனால் கடினமான பாடப்பகுதிகளைக் கற்க முடிவதில்லை. ஊக்கம் குறைந்தவர்கள் கற்பதற்கான தொடர் முயற்சிகளிலும் ஈடுபடுவதில்லை, சுருங்கக் கூறின் கற்றலில் தனியாள் வேறுபாடு பெரிய அளவில் இடம் பெற்றுள்ளது. (மேலது, ப. 212).

### வகுப்பறைக் கற்றலின் முக்கியத்துவம்

### யார் கற்கிறார்கள்?

மாணவர்களின் வயது, திறன், நாட்டம் மற்றும் தகுதிக்கேற்றவாறு கற்கிறார்கள், வகுப்பறைக் கற்றலானது மாணவர்களுக்கு ஏற்றவாறு அமைகிறது.

### யாரிடமிருந்து கற்றல் பெறப்படுகிறது?

ஆசிரியரிடமிருந்து கற்றலானது பெறப்படுகிறது. கற்றல் மற்றும் கற்பித்தலில் ஆசிரியர் மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் திகழ்கிறார்.

### ஏன் கற்க வேண்டும்?

பழங்காலத்தைப் போன்று வாசித்தல், எழுதுதல், கணக்கீடு செய்தல் இவற்றை மட்டும் அடிப்பைடயாக கொண்டது அல்ல. வாசித்தல், எழுதுதல், கணக்கிடுதல், உரிமை மற்றும் கடமைகள், இவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகள் பொழுதுபோக்கு இவற்றை அப்படிடையாகக் கொண்டு கற்றல் நடைப்பெறுகின்றது.

### எப்படி கற்பது?

கற்றலில் வெவ்வேறு கற்பித்தல் முறைகள் உள்ளது உதாரணமாக, பார்த்துக் கற்றல், மனப்பாடம் செய்வதின் மூலம் கற்றல், தூண்டலின் மூலம் கற்றல் முதலியனவாகும்.

### கற்றல் எப்போது நடைபெறுகிறது?

பல்வேறு சூழ்நிலைகளில் தூண்டுதல்களால் கற்றல் நடைபெறுகின்றது.

### கற்றல் எங்கே நடைபெறுகிறது?

கல்லூரி மற்றும் பள்ளிகளில் மட்டுமே கற்றலானது நடைபெறுவதில்லை, வகுப்பறையில், விளையாடும் போது, வெளியிடங்களில், விவாதங்களில், உறவினர்கள் மத்தியில் போன்ற பல இடங்களில் கற்றல் நடைபெறுகின்றது. மேற்கூறிய கற்றலில் மாணவர்களுக்குக் கற்றலானது எங்கு? யார்? எப்படி? எங்கே? எப்போது? கற்கப்படுகிறது என்பதை கற்றலின் மூலம் அறியப்படுகிறது.

### பாண்டுராவின் உற்றுநோக்கிக் கற்றல் மற்றும் சமூககற்றல்

பாண்டுரா நான்கு நிலைகளில் கற்றல் இயக்கத்தை விவரித்துள்ளார்.

### கவன ஈர்த்தல் (Alternate Process)

கற்றலில் உற்று நோக்குதல் ஒரு முக்கியப் பங்கை அளிக்கிறது உற்று நோக்குதல் செயல்பட கவன ஈர்த்தல் உறுதுணையாக இருக்கிறது.

### தக்க வைத்தல் (Retention Process)

உற்று நோக்குதல் செய்யப்பட்ட காட்சிகள் நினைவாற்றலில் தக்க வைக்கப்படுகிறது. காட்சி மற்றும் சொல் மூலமாக நினைவாற்றலில் தக்க வைத்தல் நேரிடுகிறது.

### உருவாக்கு முறை (Production Process)

அறிதல், மற்றும் மறுபார்த்தல் செய்யப்படும்போது தக்க வைத்தல் செம்மையாக நடைபெறுகிறது சுய கண்டறிதல் மற்றும் சுயதிருத்தம் மற்றும் தக்க வைக்கும் விவரங்களை சரிபார்க்கப் பயன்படுகிறது.

### ஆர்வமூட்டல் முறை (Motivation Process)

பாண்டுரா, ஆர்வமூட்டல் என்பது ஒரு வலுவூட்டியாகவே செயல்படுகின்றது என்பதைக் கண்டறிந்தார். மற்றும் வகுப்பறைச் சூழல் ஒரு முக்கியப் பங்கை கற்றலில் வகிக்கிறது. உற்றுநோக்குதல் திறன்களை மாணவர்களிடையே வளர்க்க வேண்டும். மாணவர்களிடையே கூட்டுறவு கற்றல் மற்றும் ஒன்றிணைந்து கற்றல் மற்றும் குழு கற்றல் முறைகளை உருவாக்க வேண்டும் என்று பாண்டுரா கற்றல் முறைகளை விளக்கிக் கூறுகின்றார். இவர்மட்டுமல்லாது கற்றல் கோட்பாடுகளையும் கற்றல் முறைகளையும் தார்ண்டைக், பாவ்லோவ், ஸ்கின்னர், கெஸ்டாப்ட், குர்ட், டால்மன் போன்ற எண்ணற்ற உளவியல் அறிஞர்கள் விளக்கமளித்துள்ளனர். (சு. மீனாட்சி சுந்தரம், முற்போக்கு கல்வி உளவியல், ப. 54)

### முடிவுரை

ஒரு மனிதனின் மனித வளர்ச்சி செயல்பாடுகள் உளவியல் ரீதியாக ஆராய்ந்து அதனைக் கற்றல் மூலம் எவ்வாறு வெளிப்படுத்த முடியும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகவும், உளவியல் அறிஞர்களின் கருத்தாகவும் விளக்கப்படுகிறது. இக்கற்றலானது கற்றலுக்கு அடிப்படையாக இருக்கின்றது. ஹெவிகா்ஸ்ட் கூற்றுப்படி வளர்ச்சிசார் செயல்களானது மனித கற்றல் வளர்ச்சியில், உடல் வளர்ச்சி, அறிவுவளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, சமூக வளர்ச்சி இவற்றில் கற்றல் பெரிதும் பங்களிக்கிப்படுகின்றன என்று கூறுகிறார். பியாஜே, கோல்பா்க் போன்ற உளவியல் அறிஞர்கள் நல்லொழுக்க வளர்ச்சியைப்பற்றிக் கூறியுள்ளனர். நல்லொழுக்க வளர்ச்சியானது, மாணவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தி நற்பண்புகளை வளர்க்கின்றன. எனவும், கோல்பர்க் என்பாரது கருத்து, நல்லொழுக்க வளர்ச்சியானது மாணவர்களின் நற்பண்புகளை வளர்ப்பது மட்டுமல்லாமல் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதேயாகும் என்று கூறுகிறார். ஒருவனின் வாழ்வில் மனவெழுச்சியானது நேர்மறை மற்றும் எதிர்மறை நடத்தைகளால் கற்றலானது கட்டுப்படுத்தப்படுகின்றன எனவும் மனவெழுச்சி நுண்ணறிவு பற்றி ஜாக்கு மேயர், பீட்டர் சலோவே இருவரும் ஒருவனின் மனவெழுச்சி நுண்ணறிவானது சமூகச்சூழலில் தன் நடத்தையின் மூலம் நற்பண்புகளை வளர்த்து நுண்ணறிவைப் பெருக்கிக் கொள்ளமுடியும் என்று கூறுகின்றனர். நம் மனவெழுச்சியைக் கருவிலிருந்தே உருவாக்கமுடியும் என்று எப்.எஸ்.பவர்ஸ் கூறுகிறார். மனித வளர்ச்சியில் கற்றல் உளவியலானது பெரும்பங்கு வகிக்கிறது என்று கேட்ஸ், ஜி.டி.போயஸ், மாஸ்கோவிட்ஸ், ஆர்கல் போன்றோர் வரையறுத்துக் கூறுகின்றனர். மனித நடத்தைக்கு அடிப்படையாக இருப்பது ஒருவரின் மனவெழுச்சி முதிர்ச்சிப்பண்புகளாகும். இப்பண்புகள் கற்றலில் தனியாள் வேறுபாடுகளைக் கண்டறியப் பயன்படுகின்றன. காக்னே போன்றோர்கள் கற்றல் கோட்பாட்டுக்கான வரையறையையும் வரையறுத்துள்ளனர். மாணவர்களுக்குக் கற்றலானது எங்கு?, யார்?, எப்படி?, எங்கே?, எப்போது கற்கப்படுகிறது என்பதைக் கற்றலின் மூலம் வரையறுத்து வெளிப்படுத்தியுள்ளார் பாண்டுரா. இவ்வாறாக,

கற்றலானது மனித வளர்ச்சியில் பிறப்பு முதல் இறப்பு வரை நடந்தேறி வருகின்றது என்பதைப் பல்வேறு உளவியல் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

### துணைநின்றவை


- மீனாட்சிசுந்தரம் சு., (முதற்பதிப்பு, பிப்ரவரி 2010), முற்போக்கு கல்வி உளவியல், திண்டுக்கல்: காவ்யமாலா பப்ளிஷர்ஸ்.
- நாகராஜன் கி., (நான்காம் பதிப்பு ஜூலை 2012), கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல், சென்னை: இராம் பதிப்பகம்.


******************

# மொழிப்பாடம் கற்பித்தலின் நோக்கம் IMPORTANCE OF LEARNING LANGUAGE


## முனைவர் க. உமாமகேஸ்வரி | Dr. K. Umamaheswari

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு, கோயம்புத்தூர். அலைபேசி : 9677240403, uma061982@gmail.com, Orcid Id 0000-0003-4814-7661



### ஆய்வுச்சுருக்கம்

வளர்கின்ற சமுதாயத்தின் வளர்ச்சிப்படியாக இருப்பது மொழி. ஒரு சமுதாயத்தின் வரலாறு, நாகரிகம், பண்பாடு, அரசியல் குறித்து அறிவதற்கு மொழி மிகவும் அவசியம். மொழியானது மாணவர்களின் அறிவை வளர்க்கவும், மாணவர்களின் அறிவு வளர்ச்சியின் மூலம் சமுதாயத்தை வளர்க்கவும், மாணவர்களின் நிலையை உயர்த்தவும், மாணவர்கள் செயல்படும் விதத்தை உணரவும், மாணவர்களின் செய்திப் பரிமாற்றத் திறனை உயர்த்தவும் மாணவர்கள் பிற நாடு, சமுதாயத்தோடு உறவு கொள்ளவும், மாணவர்கள் சமுதாயச் சாதனங்களான இலக்கியம், இலக்கணம், அறிவியல், கலை முதலியனவற்றை அறிந்து நயத்தை உணரவும் வழிவகுக்கும் ஒரு கருவியாக மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழை முதன்மொழியாகப் பயிற்றுவிக்கும்போது எந்த அளவுக்கு அவர்கள் மேற்கூறிய திறன்களையும் மொழிக்கூறுகளையும் பெற்றுள்ளார்கள் என்பதையும் இவற்றைக் கற்கும்போது அவர்களுக்கு என்னென்ன சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதனையும் அச்சிக்கல்களுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதனையும் இக்கட்டுரையில் காணலாம்.

### Abstract

Language is essential for understanding the history of society, civilization, culture, and politics. Language is useful for improving their learning skills. Using this skill they can develop the society, elevate the status of the students, realize the way in which the students function, enhance the communication skills of the students, it helps them to share new ideas. Language is essential for the development of a developing society. Language is essential for understanding the history of a society, civilization, culture, and politics. In this review, we will see to what extent they have acquired the above skills and linguistics while teaching Tamil as